# கொவிட்-19 தடுப்பூசி தொடர்பான தகவல்கள்

1. கொரோனா வைரஸ் தடுப்பூசியானது அதனுள் வைரஸை கொண்டிராமையால், கொவிட்-19 நோய்த்தொற்றை ஏற்படுத்தாத அதே வேளை PCR பரிசோதனை முடிவில் தொற்றுக்குள்ளானவர் என்ற முடிவையும் தராது.
2. நீங்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதனால் முதல் 48 மணித்தியாலங்களில் காய்ச்சல், உடல் வலி, தலை வலி போன்ற எந்த ஒரு தடுப்பூசிகளையும் பெறுவதால் ஏற்படும் பக்கவிளைவுகளை உணர்வீர்கள். பரசிட்டமோல் (Paracetamol) மூலம் இவ் அறிகுறிகளை குணப்படுத்த முடியும்.
3. நீங்கள் தடுப்பூசியை பெற்றுக்கொண்ட பின்னர் குளித்தல் மற்றும் உடல் கழுவுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடலாம்.
4. தடுப்பூசியை பெற்றுக்கொள்வதால் உருவாகும் பக்கவிளைவுகளிற்கும் தடுப்பூசியின் வினைத்திறனிற்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை.
5. நீங்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவராக இருப்பினும் எந்தவிதமான நோய் அறிகுறிகளும் இன்றி நோய்த்தொற்றுக்குள்ளானவராக இருக்க முடியும் அதேவேளை நீங்கள் வைரஸை மற்றவர்களிற்கு பரப்பக்கூடிய சாத்தியக்கூறுகளும் உள்ளது, ஆகவே முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், சமுக இடைவெளியை பேணுதல் போன்ற செயற்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும்.
6. தடுப்பூசியானது கர்ப்பிணி தாய்மார்களிற்கும், தாய்ப்பாலூட்டும் தாய்மார்களிற்கும் பரிந்துரைக்கப்படவில்லை இருந்தபோதிலும் இதனை அறியாமலே தடுப்பூசியை பெற்றுக்கொண்டிருப்பின் அது தொடர்பாக கவலையடைய தேவையில்லை.
7. நீங்கள் நீண்டகால நோய்களான சுவாச நோய்கள், இதய நோய்கள், சிறுநீரக நோய்கள், ஈரல் நோய்கள், நீரிழிவு மற்றும் மூட்டுவாதம் ஆகிய நோய்களை உடையவர் எனில் கட்டாயம் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் நீங்கள் மது அருந்துபவராகவோ அல்லது புகைப்பிடிப்பவராகவோ இருப்பினும் நீங்கள் இவ் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
8. தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கு உயர் வயதெல்லை கிடையாது, ஆகவே நீங்கள் 80 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பினும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
9. நீங்கள் இரண்டு Anti-Platelet மருந்துகளை (Aspirin, clopidogrel, dipiridamole) பாவிப்பவராக இருப்பினும் அம்மருந்துகளை நிறுத்தாது தடுப்பூசியை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் Warfarin மருந்து பாவிப்பவர் எனின் உங்கள் INR பரிசோதனையானது மூன்றை விட குறைவாக இருப்பின் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.
10. நீங்கள் உடல் நிர்ப்பீடனத்தை குறைக்கும் மருந்துகளை (Immuno suppressants) பாவிப்பவராக இருப்பினும் எந்தவித பிரச்சினைகளும் இல்லாமல் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம்.
11. நீங்கள் ஏற்கனவே கொவிட்-19 தொற்றுக்கு உள்ளானவரெனில், தொற்று முழுமையாக குணமடைந்து நான்கு வாரங்களிற்கு பின்னர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.
12. தடுப்பூசியை பெற்றுக்கொள்வது கருத்தரித்தலில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது.
13. நீங்கள் ஒவ்வாமை (Allergies) உடையவராக இருப்பின் மருத்துவ கண்காணிப்பின் கீழ் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.
14. தற்போது பாவனையிலுள்ள தடுப்பூசியானது விகாரமடைந்த வைரசுகளால் (Mutant virus) ஏற்படுத்தப்படும் கடுமையான நோய்த்தாக்கங்களிற்கு எதிராகவும் வினைத்திறனாக செயற்படக்கூடியது.
15. முழுமையான தடுப்பூசியை பெற்றுக்கொள்வதானது எதிர்காலத்தில் வெளிநாட்டுப் பயணங்களை செய்வதற்கு முக்கிய தேவைப்பாடாகும்.

**தகவல் :- இலங்கை விசேட பொதுமருத்துவ நிபுணர்கள் சங்கம் (SLCIM)**